# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 12 October 2021

NSW GOVERNMENT

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 அக்டோபர் 12-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 360 கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர்.
- இந்தக் காலகட்டத்தில், 88 988 கோவிட்-19 பரிசோதனைகள் பதிவாகியுள்ளன. நீங்கள் தொடர்ந்தும் பரிசோதனையை மேற்கொள்வதைத் தயவுசெய்து உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- நியூ சவுத் வேல்ஸ்-இல் செலுத்தப்பட்டுள்ள மொத்த தடுப்பூசிகளின் எண்ணிக்கை இப்போது 11 மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது. 16 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 90.4% ஆனோர் கோவிட்-19 தடுப்பூசி ஒன்றின் முதலாவது மருந்தளவைப் பெற்றுள்ளனர், அத்துடன் 74% ஆனோர் முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டுள்ளனர்.
- தற்போது, 766 கோவிட்-19 நோய்த்தொற்றாளர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், இதில் 155 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர், அவர்களில் 74 பேருக்கு காற்றூட்டத்திற்கான சுவாசக்கருவி (ventilator) தேவைப்படுகிறது.
- கவலைக்கிடமாக, கோவிட்-19ஆல் பீடிக்கப்பட்டிருந்த ஐந்து பேரின் இறப்புகளை ‘நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்’ இன்று அறிவித்துள்ளது - நான்கு ஆண்கள் மற்றும் ஒரு பெண். ஒருவர் 40 வயதுப்பிரிவையும், இன்னொருவர் 50 வயதுப்பிரிவையும், அத்துடன் மூன்று பேர் 80 வயதுப்பிரிவையும் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர்.
- பின்வரும் பகுதிகளைப் பற்றி நாங்கள் கவலைகொண்டுள்ளோம்: ஓரன் பார்க் (Oran Park), கிரீனேக்கர் (Greenacre), ஆல்பியன் பார்க் (Albion Park), விலவூட் (Villawood), இங்கில்பேர்ன் (Ingleburn), பிளேயர் ஏதொல் (Blair Athol), வயோமிங் (மத்திய கடற்கரையில்) (Wyoming (on the Central Coast)), வூட்பெர்ரி மற்றும் வெஸ்டன் (நியூகாஸ்ஸிலுக்கு அருகில்) (Woodberry and Weston (near Newcastle)), மற்றும் கூமா (தெற்கு நியூ சவுத் வேல்ஸ்-இல்) (Cooma (in Southern NSW)).
- முழுமையாகத் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டவர்களுக்குக் கட்டுப்பாடுகள் எளிதாக்கப்படும் இந்த நேரத்தில், தொடர்ந்தும் கோவிட்-இல் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு உங்களுக்கு நன்றி. உள்ளரங்குகளில் மற்றும் மற்றவர்களுக்கு அண்மையில் இருக்கும்போது முகக்கவசத்தை அணிவதையும், இடங்களுக்குள் நுழையும்போதும் அங்கிருந்து வெளியேறும்போதும் பதிவுசெய்துகொள்வதையும் (check in and out), அத்துடன் உங்கள் கைகளைக் கழுவ வேண்டியதையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.